21.01.2026
OS. No.223/2021
பி.**வா.சா.1 –** திரு.சரவணகுமார், த/பெ.ஆறுமுகம்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**குறுக்கு விசாரணை :-**

என் வழக்கறிஞர் மூலம் நான் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் தற்போது குறிப்பிட்டு இருக்கக்கூடிய சங்கதிகள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்னை திரும்ப அழைத்து விசாரித்த போது தாக்கல் செய்த ஆவணங்களை ஏற்கனவே சாட்சியம் அளித்த போது தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தற்போது தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.21 முதல் பி.வா.சா.ஆ.48 வரையிலான ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக பின்னிட்டு உருவாக்கப்பட்டவை என்றும் அது வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.